DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**
PROSECUTION WITNESS No.24

| | | |
|---|---|---|
| Name | : | Thiru.N.S.Srevatsan |
| Father's Name | : | N.S.Srinivasan |
| Age | : | 59 |
| Address | : | |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 24th day of September, 2025.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது 18 வது கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.01.2012 அன்று 5 வது பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவராக பணிபுரிந்த போது விசாரணை சிறைவாசி எண்.32005 நித்யா என்ற நித்யராஜ், ஆண், வயது 22, த.பெ.சாம்ராஜ் என்பவரின் இறப்பு குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று சென்னை தலைமை பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் 17.01.2012 தேதியிட்ட உத்தரவைப் பெற்றுக் கொண்டு அதே தினம் அரசு ராயப்பேட்டை மருத்துவமனைக்கு சென்று மேற்படி நித்யா என்ற நித்யராஜ் என்பவரின் இறப்பு குறித்து விசாரணை மேற்கொண்டேன், சாட்சிகள் நித்யராஜ் மனைவி திருமதி.சங்கீதா, தாயார் திருமதி. பூங்குழலி மற்றும் தந்தை திரு.சாம்ராஜ் ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். மேற்படி, அரசு ராயப்பேட்டை மருத்துவமனையில் சவக்கிடங்கிலிருந்த நித்யா என்ற நித்யராஜ் என்பவரின்

உடலை அவரது மனைவி திருமதி. சங்கீதா என்பவர் அடையாளம் காண்பிக்க நான் பார்வையிட்டேன். இறந்து போன நித்யா என்ற நித்யராஜ் என்பவரின் இரண்டு கண்களும் ரத்த சிவப்பாக காணப்பட்டன. இரண்டு கால்களின் பாதத்தின் மேல் காய வடுக்கள் இருந்தன. வலது மேல்கையில் ஒரு காயவடு இருந்தது. அவற்றை நான் குறித்துக் கொண்டேன், பிறகு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய மனு கொடுத்த பிரேத பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்தேன். 19.01.2012 அன்று மீண்டும் அரசு ராயப்பேட்டை மருத்துவமனைக்கு சென்று இறந்து போன நித்யா என்ற நித்யராஜ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் எம். பாஸ்கர், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், புழல் மத்திய சிறை – II உதவி மருத்துவர்கள் திரு.கதிரவன் மற்றும் திரு.கௌரிசங்கர் ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். சென்னை புழல் மத்திய சிறை – II துணைச் சிறை அலுவலர் திரு.ராதா கிருஷ்ணன் விசாரணை சிறைவாசிகள் ரவி என்ற தீனன் மற்றும் ஹாரிபிலிப்ஸ் ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். மருத்துவர் திரு.சிவசங்கர் என்பவரை விசாரித்து அவரிடமிருந்து இறந்து போன் நித்யா என்ற நித்யராஜின் விபத்து பதிவேட்டினை பெற்றுக் கொண்டேன். 30.01.2012 அன்று இறந்து போன நபரின் சடலத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.பொ.சாந்தகுமார் மற்றும் மருத்துவர் திரு.வேதநாயகம் ஆகியோர்களின் வாக்குமூலங்களையும் பதிவு செய்தேன். மருத்துவர் திரு.பொ.சாந்தகுமார் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்து தாக்கல் செய்த பிரேத பரிசோதனை அறிக்கையின் நகலை பெற்றுக் கொண்டேன். மேற்சொன்ன சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் இறந்து போன நபர் நித்யா என்ற நித்யராஜ் இறப்பில் சந்தேகம் இருக்கிறது என்றும், புலன் விசாரணை மேற்கொண்டால் தான் உண்மையான விவரங்கள் தெரியவரும் என்றும், எனவே முதல் தகவல் அறிக்கையின் படி, புலன் விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் நான் முடிவு செய்து எனது பிரேத விசாரணை அறிக்கையை 12.03.2012 அன்று அளித்தேன். அந்த பிரேத விசாரணை

அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான், அதிலுள்ளது என்னுடைய கையொப்பம் தான், அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.17**.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

எனது விசாரணையில் மருத்துவர்கள் கதிரவன், கௌரிசங்கர், பாஸ்கர் மற்றும் சிவசங்கர் ஆகியோர்கள் நித்யா என்ற நித்யராஜிற்கு உடலில் காணப்பட்ட காயங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படவில்லை என்று கூறியுள்ளார்களா என்றால் இல்லை, சிகிச்சை அளித்ததாகத்தான் கூறியுள்ளார்கள். புழல் மத்திய சிறை–II ன் மருத்துவர் கதிரவன் சிறைவாசி மருத்துவமனைக்கு அழைத்துவரும்படி கூறியதாகவும் அதே தினம் இரவு 9 மணிக்கு மேற்படி சிறைவாசிக்கு சிறை மருத்துவமனையில் வைத்து அவருக்கு தேவையான சிகிச்சை அளித்ததாக கூறியுள்ளார். எனது விசாரணையில் அவர் தான் கொடுத்த சிகிச்கை குறித்து விரிவாக கூறவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் புழல் மத்திய சிறை–II ன் மருத்துவர் கதிரவன் என்பவரிடம் இறந்து போன நித்யா என்ற நித்யராஜ் மூன்று நாட்களுக்கு முன்பு குடிபோதையில் இறந்து விட்டதாக கூறியதும், தனது இரண்டு தோள்பட்டைகளிலும் வலி இருப்பதாக கூறியதும் தெரியவந்தது என்றால் சரிதான். நான் எனது அறிக்கையில் ரிமாண்ட் ரிப்போர்ட்டை பரிசீலனை செய்கிற போது 12 வது பெருநகர குற்றவியல் நடுவரிடம் No complaints against police என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இறந்து போன நித்யா என்ற நித்யராஜிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் கதிரவன், கௌரிசங்கர், பாஸ்கர் மற்றும் சிவசங்கர் ஆகியோர்கள் தாங்கள் செய்த சிகிச்சை குறித்த விரிவான அறிக்கையை என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் நானும் அதை கேட்டு பெறவில்லை என்றாலும் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**
PROSECUTION WITNESS No.25

| | | |
|---|---|---|
| Name | : | S.Krishnamoorthy |
| Father's Name | : | Sathyanarayanan, |
| Age | : | 42 |
| Address | : | |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 24th day of September, 2025.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் கடந்த 23.08.2022 அன்று என்னையும் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் அவர்களையும் அலுவல் சாட்சிகளாக இருக்க சிபிசிஐடி அலுவலகத்திற்கு செல்லும்படி எங்கள் ஆணையர் உத்திரவிட்டார். அதன்படி நாங்கள் இருவரும் சிபிசிஐடி அலுவலகம் சென்றோம். அங்கிருந்த ஆய்வாளர் செல்வின் சாந்தகுமார் என்பவர் லாக்கப் டெத் சம்பந்தமாக எதிரிகளை விசாரிக்க இருப்பதாகவும் அதற்கு சாட்சிகளாக இருக்கும்படி எங்களை கேட்டுக் கொண்டார். எங்கள் முன்பு ஆஜர் முதல் எதிரி ராமலிங்கம் அவர்களை ஆய்வாளர் விசாரித்தார் பின்னர் விஜயகுமார் என்பவரை விசாரித்தார்

அவர்கள் கொடுத்த வாக்குமூலங்களை தட்டச்சு செய்து அவர்களிடம் கொடுத்து படிக்கச் சொன்னார் திரு. ராமலிங்கம் அவர்கள் சற்று நேரம் யோசித்துவிட்டு I denied above statement என்று எழுதி கையொப்பமிட்டர். விஜயகுமார் படித்துப் பார்த்துவிட்டு கையொப்பமிட்டார். அதன்பிறகு நாங்கள் இருவரும் கையொப்பமிட்டோம். அதன்பிறகு மறுநாள் மற்றுமொரு நபரை விசாரிக்க வேண்டுமென்றும் அன்றும் எங்களை வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். மறுநாள் நாங்கள் இருவரும் மதியம் 2.00 மணியளவில் சிபிசிஐடி அலுவலகம் சென்றோம் அங்கு நானும் ஆனந்த் வினோத்சிங் என்பவரை எங்கள் முன்னிலையில் விசாரித்து அவரது வாக்குமூலங்களை பதிவு செய்தார்கள் அதை அவர் படித்து பார்த்துவிட்டு கையொப்பமிட்டார். நாங்களும் கையொப்பமிட்டோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் முறையே **அ.சா.ஆ.**18, 19, 20. அதன்பிறகு 27.08.2022 அன்று சம்பவம் நடந்த இடமான ஐசிஎப் கே-7 காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று அந்த அறையை காட்டி மாதிரி வரைபடம் வரைந்தார்கள். அந்த அறையை அளந்தார்கள். அப்போது தயாரிக்கப்பட்ட பார்வை மகஜர் **அ.சா.ஆ.**21, மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.**22. இது சம்பந்தமாக துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

ஆணையர் எங்களுக்கு வாய்மொழி உத்தரவுதான் பிறப்பித்தார். அன்றைய தினம் எங்கள் அலுவலக வருகைப்பதிவேட்டில் நாங்கள் கையொப்பமிட்டோம் சாட்சிகளாக போகச் சொன்னதால் போனோம். அன்றையதினம் அலுவலகப் பணி தவிர வேறு பணிகளுக்கு செல்லும்போது பயணப்படி பஞ்சப்படி வழங்கப்படும் என்றால் இல்லை.

நான் சொன்னபடி சிபிசிஐடி அலுவலகம் செல்லவில்லை என்றாலும் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. பின்னிட்டு நாங்கள் சிபிசிஐடி அலுவலகம் சென்று அவர்கள் தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் அவர்கள் சொன்னபடி கையொப்பமிட்டு கொடுத்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் சிபிசிஐடி போலீசாரின் இருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |